**செய்தி வெளியீடு எண் : 1636** **நாள் : 19.09.2022**

**செய்தி வெளியீடு**

ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கான நேர்காணல்

இவ்வாண்டிற்கான ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கான நேர்காணல் அரசு ஆணை எண்: 136 நிதி(ஓய்வூதியம்) நாள்:20.05.2022ன் படி 01.07.2022 முதல் நடைபெற்று வரும் நிலையில் இதுநாள் வரை 70% மேலான ஓய்வூதிய நேர்காணல் முடிவுற்றுள்ளது. 30.09.2022 க்குள் ஓய்வூதியர்கள் குடும்ப ஓய்வூதியர்கள் தங்களின் வாழ்நாள் சான்றினை வழங்க வேண்டியுள்ளதால் , இது வரை வாழ்நாள் சான்று வழங்காத ஓய்வூதியர்கள் உடனடியாக தங்களது வாழ்நாள் சான்றினை 30.09.2022 க்குள் கீழ்கண்ட ஏதேனும் ஒரு வழிமுறையில் வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்துக்கு நேரில் வருவதன் மூலமாக
- இந்திய அஞ்சல் துறை வங்கி (IPPB) சேவை மூலமாக
- இ–சேவை மையம் (e–seva centre) மற்றும் பொது சேவை மையங்கள் வழியாக
- ஜீவன் பிரமான் முகம் செயலியினை (Face App) பயன்படுத்தி ஆண்டு வாழ்நாள் சான்றினை பதிவு செய்யலாம்
- ஓய்வூதியர்கள் சங்கங்கள் நடத்தும் முகாம்களில் கலந்து கொண்டு ஜீவன் பிரமான் மூலம் மின்னணு வாழ்நாள் சான்றிதழினை பதிவு செய்யலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in